**Minutes of the Meeting of Public Hearing held on 07.01.2011 at 11.00 AM regarding the proposed Silica Sand Mining by M/s Tamil Nadu Minerals Limited at Mudhaliyar Kuppam Village, Cheyyur Taluk, Kancheepuram District**

**Present**

1. **District Revenue Officer, Kancheepuram District**
2. **District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Maraimalai Nagar**

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar welcomed the public and requested the District Revenue Officer, Kancheepuram District to conduct the Public Hearing and invite the public to offer their views, after the presentation made by the Project Proponent.

District Revenue Officer, Kancheepuram District welcomed the Gatherings and briefed the Public Hearing procedure as stipulated in the EIA Notification 2006 and requested the Project Proponent to make a presentation and then, requested the public to register their views in precise and clarity.

**Mr. R.K.Jayaseelan, Consultant to M/s Tamil Nadu Minerals Limited, Chennai**

Briefed the project through power point presentation with the help of LCD projector in the following lines:

- Need for the Project
- Salient features of the project scenario
- Benefits of the project
- Site suitability study
- Present Environmental Scenario
- Environment impact assessment
- Environmental Management Plan

**1. Tmt . Sellammal, Mudhaliyar Kuppam**

Welcomed the project, since the agricultural activity in their village doesn't improve the economical status of the individuals.

**2. Tmt. Kalai Selvi, Mudhaliyar Kuppam**

Welcomed the project, as it will develop this backward area and generate employment for the poor.

**3. Tmt. Amudha, Mudhaliyar Kuppam**

We welcome the establishment of the Silica Sand mining at Mudhaliyar Kuppam.

**4. Tmt. Ponni, Mudhaliyar Kuppam**

I welcome the project in this area

**5. Tmt. Neelaveni, Mudhaliyar Kuppam**

Welcomed the project, as it will generate employment to the village people.

**6. Thiru. Manoharan, Mudhaliyar Kuppam**

I welcome the project in this area, since this project will create more employment opportunity to the youths.

**7. Thiru. Narayanan, Mudhaliyar Kuppam**

This project will improve the socio-economic status of the local villagers and hence I welcomed the project.

Finally, District Revenue Officer, Kancheepuram District, informed that the views expressed by the Public have been recorded and concluded the meeting.

No written representations were received during the course of public hearing.

The attendance register of the participants and recorded video coverage of Public Hearing in compact disc are appended herewith.

| | |
|---|---|
| **District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Maraimalai Nagar, Kancheepuram District.** | **District Revenue Officer,<br>Kancheepuram District.** |

**07.01.2011 அன்று காலை 11.00 மணியளவில் தமிழ் நாடு கனிம நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள சிலிக்கா மணல் சுரங்கம், முதலியார் குப்பம் கிராமம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை**

**முன்னிலை**

1. **மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம்**
2. **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலை நகர்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மறைமலை நகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்று, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இந்த பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தினை நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், திட்ட முனைவோர் திட்டம் குறித்து விளக்கமளித்தவுடன், பொது மக்கள் தங்கள் கருத்தினைக் கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்து, மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசியதோடு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006–ல் வரையறுத்துள்ள பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடைமுறைகளை விவரித்தார். திட்ட முனைவோர் இத்திட்டம் குறித்து விளக்கம் அளித்தவுடன், கருத்து தெரிவிக்க விரும்புவோர் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. R.K. ஜெயசீலன், கலந்தாய்வாளர், தமிழ் நாடு கனிம நிறுவனம், சென்னை அவர்கள் இத்திட்டத்தின் செயல்முறை விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தார்.

- திட்டத்தின் தேவை
- திட்டத்தின் தோற்றம் பற்றிய சிறப்பியல்புகள்
- திட்டத்தின் பயன்பாடு
- திட்டத்திற்கு தகுந்த இடம் பற்றிய ஆய்வு
- தற்போதைய சுற்றுச்சூழல் விவரம்
- சுற்றுச்சூழலின் தாக்கம்
- சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்

**1. திருமதி. செல்லம்மாள், முதலியார்குப்பம்**

இக்கிராமத்தில் விவசாயத்தில் முறையான வருமானம் இல்லாததால் தனிநபர் பொருளாதார நிலையில் முன்னேற்றம் இல்லாமல் இருக்கின்றனர். ஆகவே இத்திட்டத்தினை வரவேற்கிறோம்.

**2. திருமதி. கலைச்செல்வி, முதலியார்குப்பம்**

இந்த திட்டமானது பிற்படுத்தப்பட்ட இப்பகுதியின் வளர்ச்சிக்கும் மற்றும் ஏழை–எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தரும் திட்டம் என்பதால் இத்திட்டத்தை வரவேற்கிறேன்.

**3. திருமதி. அமுதா, முதலியார்குப்பம்**

முதலியார் குப்பத்தில் சிலிக்கா மணல் சுரங்க நிறுவனம் நிறுவப்படுதலை நாங்கள் வரவேற்கிறோம்.

**4. திருமதி. பொன்னி, முதலியார்குப்பம்**

இந்தப் பகுதியில் இத்திட்டத்தினை நான் வரவேற்கிறேன்.

**5. திருமதி. நீலவேணி, முதலியார்குப்பம்**

கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரும் இத்திட்டத்தினை வரவேற்கிறோம்.

**6. திரு. மனோகரன், முதலியார்குப்பம்**

இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரும் இத்திட்டத்தை இப்பகுதியில் நான் வரவேற்கிறேன்.

**7. திரு. நாராயணன், முதலியார்குப்பம்**

இத்திட்டம், உள்ளூர் கிராமவாசிகளிடம் சமூக–பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதால், இத்திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

இறுதியாக மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் இத்திட்டம் குறித்து பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து கூட்டத்தினை நிறைவு செய்தார்.

பொது மக்கள் கருத்து கேட்டுணருதல் தொடர்பாக இதுவரை எந்தவித எழுத்துபூர்வமான கருத்துக்கள் பெறப்படவில்லை.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு, நிகழ்ச்சியை பதிவு செய்யப்பட்ட ஒலி, ஒளி குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.